# **In the Court of the Additional District Munsif, Padmanabhapuram.**

O.S.No.94/2020 தேதி-13.02.2025

(P.W.1) - ஞானதாஸ்

குறுக்கு விசாரணை

1. வழக்கு ஏ மற்றும் பி-பட்டிகை சொத்துக்கள் 1969-ஆம் வருட ஆவண எண் 2391-ன்படி கிடைப்பபெற்றது என்றால் சரிதான். ஏ-பட்டிகை சொத்து நான் சுஜாதாகுமாரி என்பவரிடமிருந்து வாங்கப்பட்ட சொத்து என்றால் சரிதான். மேற்சொன்ன சுஜாதாகுமாரி பாகப்பத்திரத்தில் கட்சி இல்லை என்றால் சரியல்ல. சுஜாதாகுமாரிக்கு சுரேஷ் குமார் கொடுத்த பவர்பத்திரத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, தாக்கல் செய்துள்ளேன். நான் விலைக்கு வாங்கிய சொத்தில் சுஜாதாகுமாரி 1997-ல் வேர்கிளம்பி சார்பதிவாளர் அலுவலகத்தில் 1167-வது எண்ணாக விலைப்பத்திரத்தின்படி எனக்கு கிடைக்கப்பெற்றது என்றால் சரிதான். மேற்சொன்ன ஆவணத்தின் நகல் ஏதும் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்யவில்லை. பாகப்பத்திரத்தை தாக்கல் செய்யவில்லை. வழக்கு பி-பட்டிகை சொத்தை நான் யாரிடமுமிருந்து விலைக்கு வாங்கவில்லை என்றால் பி-பட்டிகை சொத்தானது எங்களுக்கு பாத்தியப்பட்ட பாதை அதை நாங்கள் 23 வருடங்களாக பயன்படுத்தி வருகிறோம். நான் விலைக்கு வாங்கிய பத்திரமான வா.சா.ஆ-2 ஆவணத்தில் பாதை பற்றி எந்த குறிப்பும் இல்லை என்றால் சரிதான்.

2. மேற்சொன்ன சொத்தை விலைக்கு வாங்குவதற்கு முன்பு பழைய பாகப் பத்திரத்தை பார்த்து அளந்துதான் விலைக்கு வாங்கினேன் என்றால் சரிதான். மேற்சொன்ன சொத்தை அளந்து வரைபடம் தயார் செய்யப்பட்டுள்ளதா என்றால் தயார் செய்யப்பட்டுள்ளது. சர்வே எண் 273/1A-யில் எத்தனை பேருக்கு பங்கு உள்ளது என்றால் 6 பேருக்கு பங்குள்ளது, அதன் அளவு 62 சென்டாகும். நான் என் சொத்திற்கு பட்டா வாங்கியுள்ளேனா என்றால் வாங்கியுள்ளேன், அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். மேற்சொன்ன சர்வே எண் 273/1A-யில் 13 பேருக்கு பங்குள்ளது என்றால் சரியல்ல. 1-ஆம் பிரதிவாதி கிருஷ்ண பிள்ளை 1969-பாகப் பத்திரத்தில் 7-வது கட்சி என்றால் சரிதான். மேற்சொன்ன 1-ஆம் பிரதிவாதிக்கு கிடைக்கப்பெற்ற பட்டா சொத்தில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. நான் மொத்தம் எத்தனை சென்ட் விலைக்கு வாங்கினேன் என்றால் 11 சென்ட் 100 லிங்ஸ், அதில்

எவ்வளவு சென்ட் விலைக்கு கொடுத்தேன் என்றால் 4 சென்ட் சொத்தை விலைக்கு



(P.W.1) - ஞானதாஸ்

குறுக்கு விசாரணை

கொடுத்தேன். விலைக்கு கொடுத்த சொத்திற்கு எந்த பக்கம் என் சொத்து உள்ளது என்றால் கிழக்கு பக்கம் உள்ளது. விலை கொடுத்த சொத்திற்கு செல்வதற்காக பாதை அவகாசம் ஏதும் வழங்கப்பட்டதா என்றால் இல்லை. வழக்கு பட்டிகை சொத்தான ஏ-பட்டிகை சொத்தின் கிழக்கு பக்கம் யாருடைய சொத்துள்ளது என்றால் பெயர் தெரியாது.

3. தெற்கு பக்கம் யாருடைய சொத்துள்ளது என்றால் ஞானதாஸ் சொத்துள்ளது. மேற்கு பக்கம் யாருடைய சொத்துள்ளது என்றால் நினைவில்லை. வடக்கு பக்கம் யாருடைய சொத்துள்ளது என்றால் தேவதாஸ் சொத்துள்ளது. நான் தாக்கல் செய்துள்ள வாதுரையில் வடக்கு பக்கம் 1-ஆம் பிரதிவாதி கிருஷ்ணபிள்ளையின் சொத்துள்ளது என்று சொல்லியுள்ளேன் என்றால் நினைவில்லை. வா.சா.ஆ-2 ஆவணத்திலும் வடக்கு பக்கம் 1-ஆம் பிரதிவாதி கிருஷ்ணபிள்ளையின் சொத்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் விலைக்கு வாங்கிய சொத்தின் தெற்கு பக்கமும் மேற்கு பக்கமும் ஞானதாஸ் என்வருடைய சொத்து என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன ஞானதாஸ் என்பவரின் அப்பா பெயர் தெரியுமா என்றால் தெரியாது. நான் விலைக்கு வாங்கிய சொத்துபோக மீதி ஏதேனும் சொத்து சுஜாதாகுமாரிக்கு உள்ளதா என்றால் கிழக்கு பக்கம் உள்ளது.

(வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது)